# <u>நகராட்சி  நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

## <u>மேட்டூர் நகராட்சி</u>

நிகழும் குரோதி வருடம் சித்திரை மாதம் 2ம் தேதி ஆங்கில ஆண்டு **15.04.2025ம் தேதி செவ்வாய்கிழமை** காலை **11.30 மணிக்கு** மேட்டூர் நகர்மன்றத்தில் அவசர கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள் :11.04.2025 — நகர்மன்ற தலைவர்

இடம் :மேட்டூர் அணை — மேட்டூர் நகராட்சி

**மன்ற பொருள்**

**1.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் பெரியார் பேருந்து நிலையத்தில் தெற்குபுற  தார்சு கட்டிடம் கடைகள் தரைதளம் கடைகள் கட்டப்பட்டு காலியாக உள்ள கடைகளுக்கு 09.04.2025ல் மறு ஏலம் கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.  கடை எண்.45க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.துரைசாமி த/பெ சின்னு செட்டியார்<br>92/14, காவேரி நகர்<br>மேட்டூர் அணை | ரூ.10250/- |
| 2. | திருமதி.தேவிகா க/பெ செந்தில் குமார்<br>42/14, காவேரி நகர் | ரூ.10400/- |

மேற்படி கடை எண்.45க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்டுள்ள திருமதி.தேவிகா, மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.10400/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார்.  மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசு நிர்ணயம் செய்த ரூ10200தொகையைவிட ரூ.200 / அதிகமாக கோரியுள்ளார் எனவே இவ் ஒப்பந்தப்புள்ளியை  ஏற்க்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3017/2024/அ2)

**தீர்மான எண்.** 88      **நாள்.**15.04.2025

**அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் பெரியார் பேருந்து நிலையத்தில் வடக்குபுற  தார்சு கட்டிடம் கடைகள் தரைதளம் கடைகள் கட்டப்பட்டு காலியாக உள்ள கடைகளுக்கு 09.04.2025ல் மறு ஏலம் கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.  கடை எண்.7க்கு

மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை )** |
|---|---|---|
| 1. | திருமதி.நந்தினி<br>7/190, சண்முகா நகர்<br>சமத்துவபுரம் | ரூ.10500/- |
| 2. | திரு.ஜீவானந்தம்<br>14/138பி பொறையூர்<br>கோனூர் | ரூ.10300/- |

மேற்படி கடை எண்.8க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.நந்தினி, மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.10500/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசு நிர்ணயம் செய்த ரூ10200தொகையைவிட ரூ.300/ அதிகமாக கோரியுள்ளார் எனவே இவ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க்கலாம்.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3017/2024/அ2)

**தீர்மான எண். 89 நாள்.15.04.2025**
**அனுமதிக்கப்பட்டது**

**3.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் பெரியார் பேருந்து நிலையத்தில் தெற்குபுற தார்சு கட்டிடம் கடைகள் தரைதளம் கடைகள் கட்டப்பட்டு காலியாக உள்ள கடைகளுக்கு 09.04.2025ல் மறு ஏலம் கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.43க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை )** |
|---|---|---|
| 1. | திரு.எம்.சக்திவேல்<br>273/15, சின்னப்ப கவுண்டன் தெரு<br>கருமலைக்கூடல் | ரூ.10200/- |
| 2. | செயலாளர்<br>மேட்டூர் தாலூக்கா பஸ் உரிமையாளர் சங்கம்<br>மேட்டூர் அணை | ரூ.10300/- |

மேற்படி கடை எண்.43க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்டுள்ள மேட்டூர் தாலூக்கா பஸ் உரிமையாளர் சங்கம்மேட்டூர் அணை என்பவர்

அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.10300/– க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசு நிர்ணயம் செய்த ரூ10200தொகையைவிட ரூ.100 / அதிகமாக கோரியுள்ளார் எனவே இவ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3017/2024/அ2)

**தீர்மான எண். 90 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**

4. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரச்சந்தைகள் தினசரி மார்க்கெட் தவிர சாலை ஓரங்களில் தற்காலிக கடை வைப்பவர்களிடமும் தெருவில் வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்பவர்களிடமும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 19.02.2025ல் ஏலம் கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | கீதா க/பெ ஆதிகேசவன்<br>எல் 30எ, தூக்கனாம்பட்டி<br>மேட்டூர் அணை | ரூ.610111 |
| 2. | திரு.குமார் த/பெ பாலசந்திரன்<br>18, தூக்கனாம்பட்டி<br>மேட்டூர் அணை | ரூ.615100 |

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரசந்தைகள் தினசரி மார்க்கெட் தவிர சாலை ஓரங்களில் தற்காலிக கடை வைப்பவர்களிடமும் தெருவில் வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்பவர்களிடமும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், இவ்ஒப்பந்தப்புள்ளி தொகை 2024–2025 ஆண்டு தொகையை ரூ.583223 ஆகும். மூன்றாண்டு சராசரி தொகை ரூ.555891 ஆகும். வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.குமார் மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக ரூ.615100/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இத்தொகை 2024–2025ஆண்டு தொகையை விட ரூ.31877 அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.59209/– அதிகமாகவும் கோரியுள்ளார். எனவே இவ்ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3636/2024/அ2)

**தீர்மான எண்.91 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**

5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் திட்ட செலவினத்தின் பிரிவு கடிதம் எண்.5724/F.UGSS Mtr/JDO/PD/NKL/2024 நாள்.06.06.2024ன்படி, மேட்டூர் நகராட்சிக்கு UIDSSMT திட்டம் 2013–2014 ஆம் ஆண்டு கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் பாதாளசாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.7308.74/–இலட்சத்தில் பணிமேற்கொண்டு 31.10.2019 தேதியில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வரப்பெற்ற நாளில்

இருந்து ஐந்து ஆண்டுகள் திட்டத்தின் ஒப்பந்தத்தின்படி பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குதல் பராமரித்துல் பணி செய்யப்பட்டது. தற்பொழுது பராமரிப்பு காலம் முடிவுற்றதால் நகராட்சி வசம் பாதாளசாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி பாதாளசாக்கடை திட்டத்தை நகராட்சி மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததால் தனியார் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் வெளிகொணர்வு (Privatization of Outsourcing) முறையில் பணியாட்கள் கொண்டு மூன்று மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் M/s.PMS Construction, என்ற ஒப்பந்த நிறுவனத்திற்கு 09.12.2024–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொண்டு வந்த நிலையில் 09.03.2025ஆம் தேதியுடன் முடிவுற்றதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் வரையில் ஏற்கனவே செய்து வரும் M/s.PMS Construction, என்ற ஒப்பந்த நிறுவனத்திற்கு பழைய மதிப்பீட்டு விலையில் 10.03.2025 முதல் 31.03.2025 வரையில் பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் 01.04.2025 முதல் 30.04.2025 தேதி வரையில் பணி நீட்டிப்பு செய்திட அதற்கான உத்தேச மதிப்பீடு தொகைரூ.5.00/– இலட்சம் செலவினம் பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியில் வழங்க நிர்வாக அனுமதி வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்குக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1030/2005/இ1)**

**தீர்மான எண். 92 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**

6. மேட்டூர் நகராட்சிக்கு 2025–2026ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியம் கோரிக்கை அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் மேட்டூர் நகராட்சிக்கு தினசரி மார்கெட் கட்டிடம் கட்டுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி ஏற்கனவே நகராட்சிக்கு சொந்தமான மிகவும் பழமைவாய்ந்த தினசரி அங்காடி 62 எண்ணிக்கை கடைகள் இடித்து அப்புறப்படுத்தி புதிய தினசரி மார்கெட் கட்டமைக்க வேண்டியுள்ளது.

மேற்படி இடத்தில் ஏற்கனவே உள்ள பழைமையான தினசரி சதுரங்காடி கட்டிடங்கள் 1998–க்குள் கட்டப்பட்டு 28 வருடங்களுக்கு மேலாகி உள்ளதாலும் தற்பொழுது கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை குறித்து சேலம் அரசு பொறியியல் கல்லூரி வல்லூநர்களால் ஆய்வு செய்து கட்டிட ஸ்திரத்தன்மை இழந்து விட்டது என அறிக்கை அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் அரசாணை நிலை எண்.174, நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை நாள்.14.12.2022ன்படி உரிய மேல் அலுவலர்கள் அனுமதிக்கு பிரேரணை அனுப்பபட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழுதடைந்த நகராட்சி தினசரி அங்காடி (சர்வே எண். வார்டு –A, பிளாக் எண்–45, நகர புல எண்.53) கடைகள் 62 எண்ணிக்கை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3497/2024/இ1)**

**தீர்மான எண்.93 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**

7. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளின் உள்ள அரசு தடைசெய்த புறம்போக்கு இடம் நீங்கலாக மற்ற அரசு புறம்போக்கு இடங்களிள் வீடு கட்டியுள்ள பொது மக்களுக்கு நீண்ட காலமாக மேற்கூரை வரி விதிக்கப்படாமல் உள்ளது. இப்பொருள் தொடர்பாக பொதுமக்கள், நகரசபை உறுப்பினர்கள் மேற்கூரை வரி விதிப்பு செய்ய கோரி

கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்கூரைகளுக்கான புதிய வரிவிதிப்பு செய்வதன் மூலம் நகராட்சிக்கு வருவாய் பெறுகும் . எனவே அரசு புறம்போக்கு இடங்களுக்கு மேற்கூரை வரி விதிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் நலன் கருதியும், நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும் என்பதனாலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி ஒப்புதல் பெற மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.5821/2023/அ1)**

**தீர்மான எண்.94 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**

8. மேட்டூர் நகராட்சி எல்லைகளுக்குட்பட்ட ஆடி 18 பண்டிகை முன்னிட்டு வருடம் வருடம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துபவர்களிடம் கட்டணம் வசூல் செய்ய பொது ஏலம் நடத்தி அன்று ஒருநாள் மட்டும் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு விநாயகர் சிலைகளை காவேரி ஆற்றில் கரைக்க வருபவர்களிடம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துபவர்களிடம் கட்டணம் வசூல் செய்யாமல் இருந்து வருகிறது. எனவே இனி வரும் காலங்களில் ஆடி–18 மற்றும் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு காவேரி ஆற்றில் கரைக்க வரும் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகங்கள் நிறுத்துவர்களிடம் கட்டணம் வசூல் செய்ய அரசு நிர்ணயம் செய்யும் குத்தகை தொகையுடன் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2025/அ2)**

**தீர்மான எண். 95 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**

9.மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் சாலைகளின் Unicode விடுப்பட்ட சாலைகளை அளந்து அளவீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் அனுமதிக்கு அனுப்ப மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3497/2024/இ1)

**தீர்மான எண். 96 நாள்.15.04.2025**

**அனுமதிக்கப்பட்டது**